



திருப்போரூர் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் போட்டியிடும் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் வேட்பாளர் பன்னீர் தாஸை மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிமுகம் செய்து வைத்து பானை சின்னத்தில் வாக்கு சேகரித்து உரையாற்றினார். அருகில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றியச் செயலாளர்கள் வீ.தமிழ்மணி, எல்.இதயவர்மன், பையனூர் எம்.சேகர், பேரூர் செயலாளர்கள் மு.தேவராஜ், ஜி.டி.யுவராஜ் மற்றும் கூட்டணிக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.

## சென்னை கிழக்கு மாவட்டம், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி

# துறைமுகம் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர், திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் வாக்குசேகரிப்பு மற்றும் உலக பெண்கள் தினவிழா!



### மாவட்டச் செயலாளர் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

| நாள்: 6.4.2026 திங்கள் | பொருள் | இடம் |
|---|---|---|
| மாலை 5.30 மணி முதல் | துறைமுகம் சட்டமன்ற தொகுதி 55 அ, 55 ஆ வட்டங்களில் கழக வேட்பாளர் திரு.பி.கே.சேகர்பாபு வாக்குசேகரிப்பு | போர்ச்சுகீஸ் சர்ச்தெரு துறைமுகம் கிழக்கு பகுதி |
| மாலை 4.00 மணி | திரு.வி.க.நகர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் திரு.கே.எஸ்.ரவிச்சந்திரன் வாக்கு சேகரிப்பு | சாய்பாபா கோயில் அருகில் திரு.வி.க.நகர் தெற்கு பகுதி |

| எழும்பூர் சட்டமன்ற தொகுதி | | |
|---|---|---|
| மாலை 4 மணி | உலக பெண்கள் தினவிழா | பி.கே.என்.திருமண மஹால், அனிதா பள்ளி வளாகம் |
| மாலை 5 மணி | உலக பெண்கள் தினவிழா | பெரியார் திடல் |

மேற்கண்ட வாக்குசேகரிப்பிலும், அந்தந்த பகுதிக்குட்ட கழக நிர்வாகிகளும், பெண்கள் தினவிழாவில் குறிப்பிடப்பட்டவர்களும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபு**
செயலாளர், சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க.

## திருவொற்றியூரில் கழகக் கூட்டணியின் மார்க்சிஸ்ட் வேட்பாளர்

# எல்.சுந்தரராஜை ஆதரித்து கனிமொழி கருணாநிதி எம்.பி. பிரச்சாரம்!

### பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு அறிக்கை!

சென்னை, ஏப்.6-

சென்னை வட கிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவுறுத்தலின் படி திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1வது மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு அறிக்கை வருமாறு:-

திருவொற்றியூர் தொகுதியில் இன்று (6.4.2026 திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு திருவொற்றியூர் தேரடி சந்திப்பில் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆதரவு பெற்ற மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சியின் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதி வேட்பாளர் தோழர் எல்.சுந்தரராஜை ஆதாரித்து அரிவாள் சுத்தியல் நட்சத்திரம் சின்னத்திற்கு கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி வாக்கு சேகரிக்கிறார்.

ஆகையால் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், மாவட்ட பகுதி வட்ட அணியின் நிர்வாகிகள் கழக மூத்த முன்னோடிகள் கலந்துகொள்ளும் படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.

## மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர்

# காரம்பாக்கம் க.கணபதியை ஆதரித்து கழக துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வாக்கு சேகரிப்பு!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் - பி.டி.பாண்டிசெல்வம் - நொளம்பூர் வே.ராஜன் எம்.சி. – அயப்பாக்கம் துரைவீரமணி பங்கேற்பு!

சென்னை, ஏப்.6-

சென்னை தெற்கு மாவட்ட மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர் காரம்பாக்கம் க.கணபதி அவர்களை ஆதரித்து இன்று (06.04.2026 -திங்கட்கிழமை) மாலை 4.00 மணிக்கு நொளம்பூர் பாரதி சாலை மதுரவாயல் வடக்கு பகுதி தேர்தல் பணிமனை அருகில் கழக துணை பொதுசெயலாளர் திருமதி கனிமொழி கருணாநிதி எம்.பி மற்றும் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா.சுப்பிரமணியன் அவர்களும் வாக்கு சேகரிக்க வருகை தரவுள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் தொகுதி மேற்பார்வையாளர் பி.டி. பாண்டிசெல்வம், மதுரவாயல் வடக்குப் பகுதி கழக செயலாளர் நொளம்பூர் வே.ராஜன் எம்.ஏ வில்லிவாக்கம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் அயப்பாக்கம் துரைவீரமணி மற்றும் கூட்டணி கட்சிகளின் முன்னணியினர் கலந்து கொள்கிறார்கள்.

எனவே, இக்கூட்டத்திற்கு மதுரவாயல் தொகுதி கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், தோழர்கள் மற்றும் தொகுதிக்குட்பட்ட தி.மு.க. தலைமை செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய கழக நிர்வாகிகள், மாவட்ட அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் பகுதி, ஒன்றிய, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாக நிலை முகவர்கள் (BLA2), BDAக்கள், பாக நிலை உறுப்பினர்கள் (BLC) மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மதுரவாயல் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பணிக்குழு தெரிவித்துள்ளது.





சேப்பாக்கத்தில் அமைந்துள்ள சித்திக் இ அக்பர் சார்ட்டபுள் ட்ரஸ்ட் நிறுவனர் தலைவர் முஹம்மத் அமித் உசேன் அவர்களை சந்தித்து சேப்பாக்கம் திருவல்லிக்கேணி வெற்றி வேட்பாளர் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஆதரித்து சென்னை மேற்கு மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் எஸ் எச் ரஹ்மத்துல்லா தலைமையில் வாக்கு சேகரித்தனர். உடன் டிரஸ்ட் செயலாளர் முகம்மது பொருளாளர் முஸ்தபா உறுப்பினர் காதர் மொய்தீன் மற்றும் ஏராளமான உடன் இருந்தனர்.



# தி.மு.க. இளைஞர் அணி

## கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தேர்தல் பரப்புரை சுற்றுப்பயண அறிவிப்பு

கழக இளைஞர் அணிச் செயலாளர் – மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 2026 சட்டமன்றத் தேர்தலில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து, முதல்கட்ட பரப்புரையை முடித்துள்ள நிலையில், 2–ஆம் கட்டமாக தஞ்சாவூர், அரியலூர், பெரம்பலூர், கள்ளக்குறிச்சி ஆகிய மாவட்டங்களிலும், புதுச்சேரி மாநிலத்திலும் அவர் மேற்கொள்ள உள்ள பரப்புரை பயண விவரம் வருமாறு :

**6.4.2026 திங்கள்கிழமை**

| | | |
|---|---|---|
| காலை 10.00 மணி | திருவையாறு | தேரடி திடல், திருவையாறு. |
| காலை 11.30 மணி | கும்பகோணம் | காந்தி பார்க், கும்பகோணம். |
| மாலை 4.00 மணி | திருவிடைமருதூர் | கடைவீதி, பந்தநல்லூர். |
| மாலை 5.00 மணி | ஜெயங்கொண்டம் | அண்ணா சிலை அருகில், ஜெயங்கொண்டம். |
| மாலை 6.30 மணி | குன்னம் | கடைவீதி, குன்னம். |
| இரவு 8.00 மணி | உளுந்தூர்பேட்டை | அண்ணா சிலை அருகில், உளுந்தூர்பேட்டை. |

**7.4.2026 செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தொகுதிகள் | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | முதலியார்பேட்டை, உப்பளம், பாகூர். | மரப்பாலம், முதலியார்பேட்டை. |
| காலை 10.45 மணி | வில்லியனூர், திருபுவனம், மங்கலம். | கிழக்கு சந்நிதி வீதி, வில்லியனூர். |
| காலை 11.30 மணி | நெல்லித்தோப்பு, உருளையான்பேட்டை, காலாப்பட்டு, கதிர்காமம், ராஜ்பவன். | அண்ணா சிலை எதிரில், அண்ணா சாலை, புதுச்சேரி. |

அன்பகம்
தேனாம்பேட்டை,
சென்னை–18

கலைஞர் 100
1924 - 2023



# பெரம்பலூர் தொகுதி வேட்பாளர் மருத்துவர் ச.த.ஜெயலெட்சுமி மனு தாக்கல்!


பெரம்பலூர், ஏப். 6 -

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி (தனி) வேட்பாளர் ச.த.ஜெயலெட்சுமி, பெரம்பலூர் தேர்தல் அதிகாரியும் கோட்டாட்சியருமான அனிதாவிடம் நேற்று முன்தினம் (04.04.2026), வெள்ளிக்கிழமை அன்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அதன்பிறகு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்,

அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை, ரிங் ரோடு, சின்னமுட்லு நீர்த்தேக்கம், பெரம்பலூர் அரசு தலைமை மருத்துவமனைக்கு அதிநவீன உபகரணங்கள் மற்றும் நகரத்தில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் மேம்பாலங்கள் கொண்டு வர பாடுபடுவேன் என்றும் 42 ஆண்டுகளுக்கு பிறகு பெண்களுக்கு இந்த தொகுதியை தி.மு.க. தலைமை ஒதுக்கியுள்ளது. இது பெண்கள் மத்தியில் ஆதரவாக உள்ளது எனவும் கூறினார். அப்போது மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன், காங்கிரஸ் கட்சி மாநில செயலாளர் வழக்கறிஞர் த.தமிழ்செல்வன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் மாவட்ட செயலாளர் சர்புதீன், ம.தி.மு.க.மாவட்ட செயலாளர் ஜெயசீலன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணகுமார், தலைமை செயற்குழுவின் உறுப்பினர்கள் மு.அட்சய கோபால், வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,நூருல் ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் எம்.இராஜ்குமார், செ.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஷ்வரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நா. புகழேந்தி
### ஏப்ரல் 6 (2024)



இளமைப் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்றத் தொடங்கியவர்.

1974ல் கிளைச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், ஒன்றியப் பொறுப்பாளர், மூன்று முறை ஒன்றியச் செயலாளர், மாவட்ட பொருளாளர், மாவட்ட அவைத்தலைவர், பின்னர் இரண்டு முறை விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகள் வகித்தவர்.

ஊராட்சி மன்ற தலைவராவும் – ஊராட்சி ஒன்றிய பெருந் தலைவராகவும் – இரண்டு முறை சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

“மக்களோடு மக்களாக வாழ்ந்த புகழேந்தி அவர்களது மறைவு, விக்கிரவாண்டி தொகுதிக்கும், விழுப்புரம் மாவட்டத்திற்கும் மட்டுமின்றி, கழகத்திற்கும் பேரிழப்பாகும்” என கழகத் தலைவர் அவர்கள் தனது இரங்கலில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**